**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஐப்பசித்திங்கள் 26 ம் நாள்

**இ.ம.எண். 10/2025**

**in**

**அ.வ.எண். 95/2017**

தங்கமுத்து ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பொன்னுராஜ்
2. மல்லிகா
3. அசோக்
4. வட்டாட்சியர், காங்கயம்
5. தாலுக்கா நில அளவையர், காங்கயம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 23.09.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.S.சிவபிரகாஷ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அங்குராஜ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு. V.முருகேசன்., B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் மனு அயிட்டம் 1 சொத்தான ரீசர்வே எண்.781/1 மற்றும் மனு அயிட்டம் 2 சொத்தான ரீசர்வே எண்.781/2 சொத்துக்களை தாலுக்கா நில அளவையர் ஆன 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி உதவியுடன் அளந்து அத்து நிர்ணயம் செய்து அதன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதிக்கு கடந்த 20.02.1989ம் தேதியிட்ட கிரையப்பத்திரப்படி க.ச.எண்.497/2 பு.ஏ.2.96 பாத்தியப்பட்டது. ஆனால் தற்பொழுது 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் வாதிக்கு அறிவிப்பு அனுப்பப்படாமல் ஏற்படுத்தப்பட்ட ரீசர்வே சப்டிவிசன் படி க.ச.எண்.497/2 இதற்கு புதிய ரீசர்வே எண். 781/2 என வழங்கப்பட்டு அதில் பு.ஹெக். 0.93.00 ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி வாதிக்கு பு.ஏ.2.30 நிலமே பாத்தியப்பட்டுள்ளது. மீதி பகுதியானது 4ம் பிரதிவாதியால் சட்டத்திற்கு புறம்பான வகையில் அளவிடப்படாத வண்டிப்பாதைக்கு ரீசர்வேப்படி 781/1 என வழங்கப்பட்டுள்ளது.

ii) மேற்படி செயலால் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட பூமியானது தற்பொழுது ரீசர்வே 781/1ல் உள்ளது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3

பிரதிவாதிகள் பூர்வீக வகையில் அளவிடப்படாத வண்டிப்பாதைக்கு ரீசர்வே சப்டிவிசன்படி உரிமை கொண்டாடி மனுதாரர்/வாதியின் நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து மனுதாரர்/வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறார்கள். 1 முதல் 3 எதிர்மனுதாராகள்/1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களது வண்டித்தடமான ரீசர்வே எண்.781/1க்கு கிழபுறம் அத்தாக தென்வடல் ஏரி உத்திப்பொலி அமைந்துள்ளது என்றும் அதற்கு மேல்புறம் தான் வண்டித்தடமான ரீசர்வே எண்.781/1 அமைந்துள்ளது என எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

iii) ஆனால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மனுதாரரின் பூமிக்குள் வந்து அளந்ததால் தான் வழக்கு தாக்கல் செய்யவே முகாந்திரம் ஏற்பட்டது. எனவே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அயிட்டம் 1 ஆன ரீசர்வே எண்.781/1 மற்றும் அயிட்டம் 2 ஆன மனுதாரரின் பூமியான ரீசர்வே எண்.781/2 அளவீடு செய்தால் தாவா வழக்கு மூலம் முடிவுற ஏதுவாக இருக்கும். மேலும் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையின் போது தாவா வண்டி தடம் மற்றும் வாதி பூமியை அளவீடு செய்வதற்கு தனக்கு சம்மதம் என தெரிவித்துள்ளார்.

iv) எனவே வண்டி பாதையான மனு அயிட்டம் சொத்து 1 ஆன ரீசர்வே எண்.781/1 மற்றும் வாதியின் பூமியான மனு அயிட்டம் சொத்து 2 ஆன ரீசர்வே எண்.781/2 பூமியை நீதிமன்ற ஆணையர் உதவியுடன் அளந்து அதன் விரிவான அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனு அயிட்டம் 1 சொத்தான ரீசர்வே எண்.781/1 மற்றும் மனு அயிட்டம் 2 சொத்தான ரீசர்வே எண்.781/2 சொத்துக்களை தாலூக்கா நில அளவையர்

ஆன 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி உதவியுடன் அளந்து அத்து நிர்ணயம் செய்து அதன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

<u>2. 1 முதல் 3 எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–

i) மனுதாரர் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிருரையில் இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது.

ii) இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாதுரைக்காக வழக்கு இருந்த நிலையில் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. 20.02.1989 தேதியிட்ட கிரயப்பத்திரப்படி க.ச.எண்.497/2 பு.ஏ.2.96 பாத்தியப்பட்டதாக மட்டும் குறிப்பிட்டுள்ளது கிரயப்பத்திர சங்கதிகளுக்கு புறம்பானது. 1986ம் வருடத்தில் ரீ.சர்வே செய்யப்பட்டதால் பின்னிட்டு க.ச.எண். 497/2 என்ற புல எண் வாதி கிரயம் பெற்றபோது அமுலில் இல்லை. அது சமயம் வாதியின் கிரய சொத்திற்கு ரீ.சர்வே எண்.781/2 என உட்பிரிவு வழங்கப்பட்டு வருவாய்துறையில் பட்டா மற்றும் அ பதிவேடு ஏற்பட்டு அதில் கண்ட விஸ்தீரணப்படி சொத்து சுவாதீன அனுபவித்தில் இருந்து வருகிறது.

iii) அரசு திட்டப்படி ரீசர்வே அளவிட்டபோது தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு ஆட்சேபனை கோரப்பட்டது. பின்னிட்டு தரப்பினர்கள்

முன்னிலையில் பொலி அத்துப்படியும் அனுபவப்படியும் அளவிட்டு உட்பிரிவு செய்யப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகள் பூமிக்கு செல்லும் ரீ.ச. 781/1 தடத்தில் செல்லும் பாதை வழியாக தங்களது பூமிக்கு சென்று வருகிறார்கள். தடத்தின் கிழபுற அத்து தென்வடலாக ஏரி உத்திப்பொலி அமைந்துள்ளது என்பதை வாதி தனது விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். பூமி அமைப்பிலும் அவ்வாறே உள்ளது. தற்போது வாதியின் பூமி 781/1 பகுதிக்கும் அமைந்திருப்பதாக இம்மனுவில் குறிப்பிட்டுள்ளது மோசடியானது. 1986 முதல் அமுலில் உள்ள ரீ.சர்வே படி ஆணையர் அளவிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. இம்மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரையின் சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் க.ச.எண்.497/2 பு.ஏ.2.96 பூமியானது 20.02.1989 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றும் ஆனால் ரீசர்வே சப்டிவிசன் படி க.ச.எண்.497/2 புதிய ரீ.ச.எண். 781/2

என வழுங்கப்பட்டு அதில் பு.ஹெக்.0.93.00 ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதன்படி வாதிக்கு பு.ஏ.2.30 நிலமே பாத்தியப்பட்டுள்ளது என்றும் மீதி பகுதியானது 4ம் பிரதிவாதியால் சட்டத்திற்கு புறம்பான வகையில் அளவிடப்படாத வண்டிப்பாதைக்கு ரீ.ச.எண்.781/1 என வழங்கப்பட்டுள்ளது என்றும் இதனால் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட பூமியானது தற்பொழுது ரீ.ச.எண்.781/1ல் உள்ளது என்றும் எனவே மனு அயிட்டம் சொத்து 1 ஆன ரீசர்வே எண்.781/1 மற்றும் வாதியின் பூமியான மனு அயிட்டம் சொத்து 2 ஆன ரீசர்வே எண்.781/2 பூமியை நீதிமன்ற ஆணையர் உதவியுடன் அளந்து அதன் விரிவான அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டி உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் க.ச.எண். 497/2 என்ற புல எண் மனுதாரர்/வாதி கிரயம் பெற்றபோது அமுலில் இல்லை என்றும் மனுதாரர்/வாதி கிரையம் பெற்ற சமயம் மனுதாரர்/வாதியின் கிரய சொத்திற்கு ரீ.சர்வே எண்.781/2 என உட்பிரிவு வழங்கப்பட்டு வருவாய்துறையில் பட்டா மற்றும் அ பதிவேடு ஏற்பட்டு அதில் கண்ட விஸ்தீரணப்படி சொத்து சுவாதீன அனுபவித்தில் இருந்து வருகிறது என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பூமிக்கு செல்லும் ரீ.ச. 781/1 தடத்தில் செல்லும் பாதை வழியாக தங்களது பூமிக்கு சென்று வருகிறார்கள் என்றும் தடத்தின் கிழபுற அத்து தென்வடலாக ஏரி உத்திப்பொலி அமைந்துள்ளது என்பதை வாதி தனது விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் தற்போது வாதியின் பூமி ரீ.ச.எண்.781/1 பகுதிக்கும் அமைந்திருப்பதாக இம்மனுவில் குறிப்பிட்டுள்ளது மோசடியானது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 16.09.2017 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 12.12.2022 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 30.10.2023 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 22.01.2024 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 26.02.2024 அன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, கடந்த 14.06.2024 அன்று பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 29.08.2024 அன்று பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 24.10.2024 அன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 06.11.2024 அன்று மனுதாரர்/வாதி தரப்பில் மனு அயிட்டம் 1 சொத்தான ரீசர்வே எண்.781/1 மற்றும் மனு அயிட்டம் 2 சொத்தான ரீசர்வே எண்.781/2 சொத்துக்களை தாலுக்கா நில அளவையர் ஆன 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி உதவியுடன் அளந்து அத்து நிர்ணயம் செய்து அதன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ உரிமை கொண்டாடி அத்துமீறி நுழைந்து வாதியின் அமைதியான

சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்குரையை பரிசீலிக்கும்போது மனுதாரர் தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற நாள் முதல் அதில் தென்னை மரங்களை வைத்தும் தாவா சொத்திற்கு மேல்புறத்து பகுதியில் மண் மற்றும் கற்களால் தடுப்புச்சுவர் அமைத்தும் தன் சுவாதீனத்தில் அனுபவித்து வருகிறார் என்றும் தாவா சொத்திற்கு மேல்புற பகுதியில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.776 க்கு செல்வதற்காக அளவிப்படாத வண்டிப்பாதை அமைந்துள்ளது. மேற்படி வண்டிப்பாதைக்கு கிழபுறமாக வாதியின் பூமி அமைந்துள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது.

9. மேலும் மனுதாரர் தரப்பில் அசல் வழக்குரையில் மனுதாரர்/வாதியின் கிரைய சொத்து ரீசர்வே சப்டிவிசன்படி க.ச.எண்.497/2 புதிய ரீ.ச.எண்.781/2 என வழங்கப்பட்டு அதில் பு.ஹெக்.0.93.00 ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதன்படி மனுதாரர்/வாதிக்கு பு.ஏ.2.30 நிலமே பாத்தியப்பட்டுள்ளது என்றும் மீதி பகுதியானது 4ம் பிரதிவாதியால் சட்டத்திற்கு புறம்பான வகையில் அளவிடப்படாத வண்டிப்பாதைக்கு ரீசர்வேப்படி 781/1 என வழங்கப்பட்டுள்ளது என்றும் இதனால் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட பூமியானது தற்போது ரீ.ச.781/1ல் உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் புதிய சர்வே எண்.497/2 பு.ஏ.2.96 பூமியைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் ரீ.ச.எண்.781/1ல் உள்ள தடமானது மனுதாரர்/வாதியின் பூமிக்குள் இருப்பதாக பிரதிவாதிகள்

வாதியின் பூமிக்குள் வந்து அளவீடு செய்தார்கள் என்று அதனால் பிரச்சனை ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதியின் கிரைய சொத்து ரீ.ச.எண்.781/2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு அதில் கண்ட விஸ்தீரணப்படி வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ரீ.ச.எண்.781/1 ல் உள்ள தடத்தின் வழியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

11. மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரையில் மனுதாரர் தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற நாள் முதல் அதில் தென்னை மரங்களை வைத்தும் தாவா சொத்திற்கு மேல்புறத்து பகுதியில் மண் மற்றும் கற்களால் தடுப்புச்சுவர் அமைத்தும் தன் சுவாதீனத்தில் அனுபவித்து வருகிறார் என்று சொல்லப்பட்டு பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் ரீ.ச.எண்.781/2 பூமிக்கு மேல்புற அத்தாக தென்வடல் ஏரி உத்திப்பொலி அமைந்துள்ளது என்றும் அதன் மேல்புறம் தான் தாவா பாதையான ரீ.ச.எண்.781/1 அமைந்துள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதன்மூலம் தாவா சொத்தான ரீ.ச.எண்.781/1 பூமியின் மேல்புறம் தாவா தடமான ரீ.ச.எண்.781/2 அமைந்துள்ளது என்பதும் மேற்படி ரீ.ச.எண்.781/1 மற்றும் ரீ.ச.எண்.781/2 பூமிகளின் அத்து குறித்து உபய தரப்பினர்களுக்கிடையே தீவிரமான பிரச்சனை உள்ளது என்பதும் தெரிய வருகிறது.

12. உபய தரப்பினர்களுக்கிடையே ரீ.ச.எண்.781/1 மற்றும் ரீ.ச.எண்.781/2 பூமிகளின் அத்து குறித்து பிரச்சனை உள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளவாறு ரீ.ச.எண்.781/1 மற்றும் ரீ.ச.எண்.781/2 பூமிகளை 5ம்

எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி உதவியுடன் அளந்து அத்து நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை அளவீடு செய்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் இவ்வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்மானிப்பதற்கு அது உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. எனவே மேலே கண்ட பரிசீலனைகளின்படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு தாவா சொத்துக்களை அளந்து அத்து கண்டு அது குறித்து அளவு வரைபடம் மற்றும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்யும் பட்சத்தில் தான் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனையை முழுமையாக தீர்க்க முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் அளவு வரைபடம் குறித்து ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை பொறுத்து உபயதரப்பினர்கள் ஆட்சேபிக்க இயலும் என்பதாலும் இம்மனுவில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு தாவா சொத்துக்களை அளந்து அத்து கண்டு அது குறித்து அளவு வரைபடம் மற்றும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்திரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு. T.நவநீதகிருஷ்ணன், B.Tech., LLB., M.S.No.1174/2021 அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் மனு சொத்துக்களின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டும் தாவா சொத்துக்களை தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் அளந்து அத்து கண்டு அது குறித்து அறிக்கையும், மாதிரி வரைபடமும், அளவு வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், மேலும் மனு சொத்துக்களை பார்வையிடுவதற்கு முன்பு இரு தரப்பினர்களுக்கும் உரிய அறிவிப்புகள் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.10,000/-ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் செலுத்த வேண்டும் என்றும் உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய மறு வாய்தா 15.12.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.12 18:14:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> : இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.12 18:15:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.